செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. ஆண்டுதோறும் அந்த மருத்துவமனைக்கு உணவுக்காக 45 ஆயிரம் ரூபாய் அரசு வழங்குகிறது. ஆனால், அங்கே சமையல் செய்யக்கூடிய சமையலரும், சமையல் கூடமும் இல்லாததால், ஆண்டுக்கு வருகிற 45 ஆயிரம் ரூபாயும் அரசுக்கே திரும்பச் செல்கிறது. இந்த வசதிகளையெல்லாம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவமனைக்கு ஏற்படுத்தித் தருவார்களா என்பதை நான் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதியாண்டிலே, உறுப்பினருடைய மாவட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அந்த நிதியாண்டிலே, உறுப்பினர் தெரிவித்த அத்தனைக் குறைபாடுகளும் நீக்கப்பட்டு, அவருடைய கோரிக்கைகள் அத்தனையும், அந்த நிதியின் மூலமாக — நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது — அவை அத்தனையையும் நிறைவேற்றித் தர, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) பூங்கா நகர் தொகுதி, போகிபாளையம் மற்றும் குமாரசாமி ராஜாபுரம் குடியிருப்புகள் அனுபவிப்பாளர்களுக்கு கிரயம்செய்து கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூங்கா நகர் தொகுதி, போகிபாளையம் மற்றும் குமாரசாமிராஜாபுரத்தில் வாழ்ந்துவரும் மக்களுக்கு விலைப் பட்டா வழங்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

2005 ஏப்ரல் 8] [திரு. கே.பி. அன்பழகன்]

அறிக்கை

கோட்டம் – 42 — போகிபாளையம் குடியிருப்பு

சென்னை மாநகராட்சி, மண்டலம்–3, கோட்டம் எண் 42, போகிபாளையம் பகுதியில் உள்ள குடியிருப்புகள், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமானவையாகும். வேப்பேரி கிராமம், புல எண் 1737/6 மற்றும் 1736/10–ல் உள்ள மொத்த விஸ்தீரணம் 109 மனை மற்றும் 2,340 சதுர அடி பரப்பளவு கொண்ட சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தில், சென்னை மாநகராட்சியினால் 316 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புகளைப் பயன்படுத்தி வருவோர்களுக்கே, சென்னை மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்படும் சந்தை விலை மதிப்பில், கிரயத் தொகை பெற்றுக்கொண்டு கிரயம் செய்துகொடுக்க, 1990 ஆம் ஆண்டு அரசின் ஆணை வெளியிடப்பட்டது. (அரசாணை எண் 907, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11–10–1990) ஆனால், மேற்படி குடியிருப்புகளை, சென்னை மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்படும் சந்தை விலை மதிப்பில், கிரயத் தொகை அளித்து, குடியிருப்புகளைக் கிரயம் பெற்றுக்கொள்ள அனுபவிப்பாளர்கள் முன்வரவில்லை. இதுகுறித்து, சென்னை மாநகராட்சி மன்றம், தனது தீர்மானம் எண் 591/99, நாள் 10–7–1999–ல், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கும் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கும் சலுகை விலையில் அளிக்க அரசாணை எண் 128, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24–3–1997–ல், ஆணையிட்டுள்ள நிகழ்வின் அடிப்படையில், மேற்படி குடியிருப்புகளையும் கிரயம் செய்து கொடுப்பது குறித்து, சென்னை மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

கோட்டம் – 45 — குமாரசாமிராஜாபுரம் நிலம்

சென்னை மாநகராட்சி, மண்டலம்–3, கோட்டம் எண் 45, குமாரசாமிராஜாபுரம் பகுதி, வேப்பேரி கிராமம், புல எண் 1730/1–ல், 22 மனை மற்றும் 1,469 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலமாகும். இந்நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து, 66 குடியிருப்புகள் ஆக்கிரமிப்பாளர்களால் கட்டப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புகளைக் கட்டி, சென்னை மாநகராட்சி நிலத்தினைப் பயன்படுத்தி வருவோர்களுக்கே, சென்னை மாவட்ட ஆட்சியரால்

[திரு. கே.பி. அன்பழகன்] [2005 ஏப்ரல் 8

தெரிவிக்கப்படும் சந்தை விலை மதிப்பில், கிரயத் தொகை பெற்றுக்கொண்டு, கிரயம் செய்து கொடுக்க, 1992 ஆம் ஆண்டு அரசின் ஆணை பெறப்பட்டது. (அரசாணை எண் 307, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13–12–1992) ஆனால், மேற்படி குடியிருப்புகள் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தினை, சென்னை மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்படும் சந்தை விலை மதிப்பில், கிரயத் தொகை அளித்து, கிரயம் பெற்றுக்கொள்ள அனுபவிப்பாளர்கள் முன்வரவில்லை. நில மதிப்பு குறித்து, சென்னை மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்த பின்பு, கோரிக்கை அளிப்பதாக நில அனுபவிப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

தற்போது, 2–4–2005 ஆம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி நிலத்தினை, சந்தை விலை மதிப்பில் அல்லாமல், சதுர அடி ஒன்றுக்கு ரூ. 100/– (ரூபாய் நூறு மட்டும்) என்ற மதிப்பில் கிரயத் தொகை செலுத்தி, நிலத்தினைக் கிரயம் பெற்றுக்கொள்ள சிலர் விருப்பம் அளித்துள்ளனர்.

மேற்படி அரசாணையில், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தினை, சென்னை மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்படும் சந்தை விலை மதிப்பில் கிரயத் தொகை பெற்றுக்கொண்டு, கிரயம் செய்து கொடுக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள், 2–4–2005 அன்று அளித்துள்ள கோரிக்கை குறித்து, மன்றத்தின் கருத்து பெறப்பட்ட பின்னர், நிலக் கிரயம் செய்வது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வினாயகமூர்த்தி.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையை வாசித்துப் பார்த்தேன். அது நிறைவானதாக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதிலே இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற நேரமாக நான் இதை எடுத்துக்கொள்ளவில்லை. அமைச்சருக்கும் embarrassment கொடுக்க வேண்டும் என்கின்ற நினைப்பும் எனக்கு இல்லை. விலைப் பட்டா கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து என்று நான் கேட்டிருந்தேன். சொல்லியிருக்கின்ற பதிலிலே அங்கே இருக்கின்ற குடியிருப்புகளைக் கிரயம் செய்து கொடுப்பது குறித்து என்று இருக்கின்றது. இதிலே சொல்லப்பட்டிருக்கின்ற குடியிருப்புகள் என்பது

2005 ஏப்ரல் 8] [திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி]

1931 ஆம் ஆண்டு மாநகராட்சியிலே பணி செய்கின்ற துப்புரவுப் பணியாளர்களுக்காக அன்றைக்கு இருந்த வெள்ளைக்கார ஆணையாளர் Conron Smith என்பவர் அரசிடமிருந்து இரண்டரை இலட்சம் ரூபாய் மானியம் வாங்கி 316 வீடுகளைக் கட்டிக் கொடுத்தார். அந்தத் துப்புரவுப் பணியாளர்களுக்கு அந்த வீடுகளின் அடிமனைப் பட்டாவைக் கொடுத்துவிட்டால், அவர்கள் அதை மேலும் அபிவிருத்தி செய்வார்கள் என்கின்ற கோரிக்கையிலே பிரச்சினை கடந்த பல ஆண்டுகளாக நிலுவையிலே இருந்து வருகின்றது. ஆட்சிகள் பல மாறிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. கேள்வியைக் கேளுங்கள். என்ன என்று ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: இது முக்கியம் வாய்ந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முக்கியம் வாய்ந்தது என்றால், ஏதாவது மானியக் கோரிக்கையில் பேச வேண்டும். முக்கியம் வாய்ந்ததை கவன ஈர்ப்பில் கொண்டுவரக் கூடாது. ஒரு கேள்வி கேட்பதற்குதான் அனுமதி; என்ன என்று ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: கவன ஈர்ப்பில் ஒரு முக்கியமான செய்தியை அமைச்சருக்குச் சொல்ல விரும்புகிறேனே தவிர, அரசாங்கத்தைக் குறை சொல்வதாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. கேள்வியாகக் கேளுங்கள். இதுவரையில் மற்ற உறுப்பினர்கள் பின்பற்றிய அதே நெறிமுறைதான் உங்களுக்கும்.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: இந்தப் பிரச்சினையை அதிகார வர்க்கம் தவறான அணுகுமுறையிலே எடுத்துச் செல்கின்றது. இந்த வழக்கமான நடைமுறையிலே எடுத்துச் சென்றால் இந்தப் பிரச்சினைக்கு இன்னும் பல ஆட்சிகள் மாறினாலும் தீர்வு காண முடியாது என்று நான் கருதுகின்றேன். ஆகவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால்—இந்த ஒரு பிரச்சினை மட்டும் அல்ல, சென்னையில் இதைப்போல 17 பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன— மாநகராட்சி ஆணையர், மாவட்ட ஆட்சியர், பயனாளிகள் என்று முத்தரப்பு நேரடிப் பேச்சுவார்த்தை பேசி இதற்கு முடிவு காண வேண்டும் என்பதுதான் ஒரு தீர்வாக இருக்க முடியும். அதற்கான நடவடிக்கையை அமைச்சர் எடுக்க முன்வருவாரா என்று தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பட்டாவுக்குரிய இடம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம். அந்த இடத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இடத்திற்கு உண்டான மதிப்பீட்டை நிர்ணயம் செய்து அந்தத் தொகையைக் கட்டச் சொல்லியிருப்பதன்பேரில்—அவர் பணம் செலுத்தாமலேயே அந்த இடத்திற்கு இலவசமாகப் பட்டா வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கூறியிருந்தார். அவர் கேட்டுக்கொள்கின்ற அடிப்படையிலே மாநகராட்சி மன்றத்தின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.*

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: *30–வது வருடத்திலே கட்டிய வீடுகள் இன்றைக்கு இல்லை. இல்லாத வீடுகளுக்குச் சந்தை விலையிலே கிரயம் பேசுவது என்பது சரியான முறையல்ல. அதற்கு அடிப்படையாக இருக்கின்ற அடிமனைகளுக்கு இலவசமாகப் பட்டா கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகின்றேன்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியிலே நீண்ட காலமாக இருக்கின்றார். 30 ஆண்டுகளுக்கு முன்பாக அந்தப் பகுதியினுடைய நிலையைப் பற்றி நன்றாகத் தெரியும். இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அந்தப் பகுதியிலே மிகவும் மோசமான நிலையில் இருந்த இடம்கூட, இன்றையதினத்திலே 27 இலட்சம் ரூபாய் செலவிலே மிக நல்ல பூங்காவாக அங்கு அமைக்கப்படுகிறது. அது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலிக்கிறது என்று சொன்னாலே, அதன் மூலமாகக் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைக் கூறி அமைகிறேன்.*

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி,*